**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.71** **நாள் : 05.04.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் வளர்ச்சித் திட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் புதிய பல்நோக்கு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, புதிதாகக் கட்டப்பட்ட பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தினை இன்று (05.04.2025) திறந்து வைத்தார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் இன்று (05.04.2025) வளர்ச்சித் திட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் புதிய பல்நோக்கு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, புதிதாகக் கட்டப்பட்ட பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தினை திறந்து வைத்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், பெருங்குடி மண்டலம், வார்டு-184, வீரபாண்டிய கட்டபொம்மன் தெருவில், மூலதன நிதியின் கீழ், ரூ.1.61 கோடி மதிப்பில் நாய்கள் கருத்தடைமையக் கட்டடம் கட்டும் பணியினையும், மூலதன நிதியின் கீழ், ரூ.2.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்நடை கொட்டகை கட்டுமானப் பணியினையும் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.40 இலட்சம் மதிப்பில் கிளிஞ்சல் குளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுசீரமைக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து இப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து சோழிங்கநல்லூர் மண்டலத்தில் 195ஆவது வார்டு அலுவலக வளாகத்தில் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.50 இலட்சம் மதிப்பில் பல்நோக்குக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி பணியினைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு 199, ராஜீவ்காந்தி சாலை, பொன்னியம்மன் கோயில் 1ஆவது தெருவில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், ரூ.5. 81 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடம் கட்டும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சோழிங்கநல்லூர் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சார்ந்த பொது மக்கள் பயன்பெறும் வகையில் கட்டப்பட்டு வரும் இந்த சமுதாயக் கூடம் கட்டும்பணியினை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து வார்டு-200, சுனாமி நகர், 41ஆவது தெருவில் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பெண்கள் நவீன உடற்பயிற்சிக் கூடத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இப்பகுதியில் வசிக்கும் பெண்கள் இந்த உடற்பயிற்சிக் கூடத்தினை நன்கு பயன்படுத்தி தங்களது உடல்நலத்தின பேணிக் காத்திட வேண்டும் என அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில், மாநகராட்சி ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர்கள் திரு. எஸ்.வி. ரவிச்சந்திரன், திரு. வி. இ. மதியழகன், துணை ஆணையர்கள் திரு.வி. சிவ கிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள் திரு. க. ஏகாம்பரம், திரு. க.சங்கர், திரு.எஸ்.முருகேசன், தலைமைப் பொறியாளர் (பொது) திரு. கே. விஜயகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**